Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 19 செவ்வாய்க்கிழமை (05 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 31

# புலிகளின் தாக்குதலுக்குப் பயந்து கிளாலியில் இருந்து படை வாபஸ்!

## ஆனையிறவு, இயக்கச்சிக்கு நேற்று பின்வாங்கிச் சென்றது

யாழ்ப்பாணம், ஒக்டோபர் 5

ஆனையிறவு இயக்கச்சி நிலைகளில் இருந்து புலோப்பளை, அல்லிப்பளை, கிளாலிப் பகுதிகளுக்கு முன்னேறிய ஸ்ரீலங்காப் படைகள், அப்பகுதியில் விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதல் நடத்துவார்கள் என்ற அச்சத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு அந்த இடங்களிலிருந்து பின்வாங்கி மீண்டும் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பியதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை "ஒப்பரேஷன் யாழ்தேவி" என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த படையினர் ஆனையிறவு, இயக்கச்சிப் பகுதிகளில் இருந்து முன்னேறியது தெரிந்ததே.

விடுதலைப் புலிகளின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சேதமுற்ற கனரக வாகனங்களை படையினர் கைவிட்டுச் சென்றனர்

கிளாலிப் பகுதிக்கு முன்னேறிய பின்னர் அங்கிருந்து பின்வாங்கிய ஸ்ரீலங்காப் படைகள்.

"யாழ்தேவி" நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளால் சேதமாக்கப்பட்ட இரு டாங்கிகள், ஒரு பவள் கவச வாகனம், ஒரு லான்ட்றோவர் மற்றும் ஏராளமான இராணுவ தளபாடங்களை கைவிட்டுச் சென்றுள்ளனர். இவைகள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 300 பயணிகள் படகுகள் எரிப்பு கிளாலி படகுத் துறையும் தகர்ப்பு

கிளாலிப் பகுதியிலிருந்து பின்வாங்கிச் சென்ற படையினர் அப்பகுதியிலிருந்த — முந்நூறுக்கும் மேற்பட்ட — பயணிகள் படகுகளைத் தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

பயணிகள் படகுத்துறையும் தகர்க்கப்பட்டுள்ளது.

மேலும் அப் பிரதேசத்தில் உள்ள சகல குடிசைகளும், வீடுகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் வெளியேறிய பகுதிகள் சுடுகாடு போல் காட்சியளிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## படை நடவடிக்கை தொடர்பான அரசின் முடிவுகளில் குழப்பம்!

கொழும்பு, ஒக். 5

"யாழ்தேவி" நடவடிக்கை மூலம் கைப்பற்றிய பகுதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, மேலும் முன்னேறுவதற்கு படையினர் நடவடிக்கை எடுத்து வருவதாக அரசுத் தரப்பில் நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டது.

ஆனால் படையினர் தமது நோக்கத்தை நிறைவேற்றி விட்டு தமது பழைய இடங்களுக்குத் திரும்பி விட்டதாக இராணுவப் பேச்சாளர் நேற்று அறிவித்தார்.

ஒரு நாளுக்குள் அரசுத் தரப்பில் ஏற்பட்ட இந்த மாற்றம், படை நடவடிக்கை தொடர்பாக முடிவு செய்வதில் அரசுத் தரப்பு குழப்பமாக இருப்பதையே காட்டுகிறது.

— இவ்வாறு கொழும்பு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானாறில் நேற்று ஹெலி தாக்குதலில் மூவர் பலி!

### இரு குழந்தைகள் உடல் சிதறி உயிரிழந்தன

—வல்வைச் செய்தியாளர்:— எஸ். சுந்தரலிங்கம்—

வல்வெட்டித்துறை, ஒக். 5

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளையார் ஆலயச் சந்தியில் நேற்று மாலை 4.30 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப்படை ஹெலிக்கொப்டர் ஒன்று நடத்திய தாக்குதலில் இளம் பெண் ஒருவரும் இரு குழந்தைகளும் உடல் சிதறிப் பலியானார்கள்.

அம்பேத் என்பவரின் வீட்டின் மேல் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் திருமதி அம்பேத் பானுகா (வயது 23), அவரது மகள் அம்பேத் சுஜிதா (வயது 3), மற்றும் அவர்களின் அயல் வீட்டைச் சேர்ந்த மாந்தாமன் நிஸா (வயது 4) ஆகியோர் உடல் சிதறிய நிலையில் பலியானார்கள்.

இப்பகுதியிலும் குண்டு வீச்சால் எழுந்த புகைமண்டலம் நீண்ட நேரம் அப்பகுதியில் காணப்பட்டது.

உயிரிழந்த இரு குழந்தைகளும் உடல் சிதறி, இரத்த வெள்ளத்தில் காணப்பட்டதாக எமது செய்தியாளர் குறிப்பிட்டார். (உ-த-155)

## வல்வையில் ஹெலித்தாக்கு! 14 பொதுமக்கள் காயம்!!

வல்வெட்டித்துறை, ஒக். 5

வல்வெட்டித்துறைச் சந்தியில் நேற்று பிற்பகல் 3-45 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப்படையின் ஹெலிக்கொப்டர் ஒன்று நடத்திய தாக்குதலில் 14 பொது மக்கள் காயமடைந்தனர்.

மூன்று தடவைகள் ஹெலிக்கொப்டரில் இருந்து குண்டு வீசப்பட்டது. ஒவ்வொரு குண்டும் வானத்தில் பல தடவைகள் வெடித்து பின்னர் குண்டுச் சிதறல்களாக இத[illegible]

[illegible]ன; இதனால் பலர் காயமடைந்தனர்.

ஹெலிக்கொப்டரைக் கண்டவுடன் மக்கள் வல்வெட்டித்துறை சந்தைக் கட்டடத்தில் பதுங்கியும், விழுந்து படுத்தும் தப்பிக்கொள்ள முயன்றனர்.

குண்டு வீச்சால் எழுந்த புகை மண்டலம் நீண்ட நேரம் அப்பகுதியில் வியாபித்திருந்தது. [illegible] காற்றைச் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஒக். 5

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுப் பிற்பகல் 3 மணியுடன் நீக்கப்பட்டு விட்டது.

இதேவேளை—

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது அமுலில் உள்ள ஊரடங்குச்சட்டம் இன்று காலை 6 மணியுடன் நீக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் [illegible] (உ-எ)

## கடல்புறா மைந்தர்களின் 6 ஆவது நினைவுநாள் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 5

கடல் புறாவின் மைந்தர்களின் ஆறாவது நினைவு தினம் இன்று தமிழீழம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

1987 ஆம் ஆண்டு இன்றைய தினத்தில் இலங்கை— இந்தியக் கூட்டுச் சதியால் பலாலி இராணுவத் தளத்தில் சயனைட் உட்கொண்டு பன்னிரு வேங்கைகளும் வீரச்சாவடைந்தனர்.

லெப்டினன்ட் கேணல் புலேந்திரன், லெப்டினன்ட் கேணல் குமரப்பா, மேஜர் அப்துல்லா, கப்டன் நளன், கப்டன் பழனி, கப்டன் மிரேஷ், கப்டன் ரகு, கப்டன் கரன், லெப்டினன்ட் அன்பழகன், லெப்டினன்ட் தவக்குமார், இரண்டாம் லெப்டினன்ட் ஆனந்தகுமார், இரண்டாம் லெப்டினன்ட் ரெஜிநோல்ட் ஆகிய பன்னிரு வேங்கைகளுமே இவ்வாறு வீரச்சாவடைந்தவர்களாவர்.

இன்று காலை 8 மணிக்கு சகல கோட்டங்களிலும் உள்ள பன்னிரு வேங்கைகளின் தூபிகளிலும் நினைவுருவப் படங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்களிலும் சுடர் ஏற்றியும் மலர் மாலைகள் அணிவித்தும் மக்கள் அஞ்சலி நிகழ்வுகளில் ஈடுபடுவர். (உ-த)

## திருநெல்வேலியில் விழுந்த மண்டைதீவு ஷெல்!

திருநெல்வேலி, ஒக். 5.

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 4.45 மணிக்கு யாழ்ப்பாணப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தின் போது திருநெல்வேலி சந்திக்கண்மையில் வீடொன்றில் விழுந்து வெடித்த ஷெல்லினால் ஒருவர் காயமடைந்தார். வீடுபகுதி சேதமடைந்தது.

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து வந்து திருநெல்வேலியில் தங்கியிருந்த சோமசுந்தரம் தனலட்சுமி (வயது 56) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-5-15-17-147)

## கோபாலசாமி அணியை விலக்க கருணாநிதி முடிவு?

சென்னை, ஒக். 5

கட்சிக்குள் தமது மகன் ஸ்டாலினுக்கு எதிராக அடுத்த தலைவராக வளர்ச்சி பெற்று வரும் கோபாலசாமியை கட்சியிலிருந்து வெளியேற்றவும்—

அதன் மூலம் வேறு அரசியல் சாம்ராஜ்யம் எட்டவும் கருணாநிதி இவ்வாறு முடிவு செய்திருப்பதாகக் கருதப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் வை. கோபாலசாமிக்கு தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் செய்திகளைப் பயன்படுத்தி, அவரை தி.மு.கவிலிருந்து வெளியேற்ற தி.மு.க. தலைவர் கருணாநிதி முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில்—

தலைவர் மு.கருணாநிதியின் தலைமையில் தாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பதாகவும்—

விடுதலைப் புலிகளுக்கும் தமக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்றும் வை. கோபாலசாமி அறிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுவனில் படையினர் சூடு சிறுவன் பலி; ஒருவர் காயம்

கட்டுவன் பகுதியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் வீடு பார்க்கச் சென்றவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

கட்டுவனில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது மல்லாகத்தில் வசிக்கும் சின்னத்துரை சண்முகராசா (வயது 56) என்பவரே இவ்வாறு காயமடைந்தார். இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தம்முடன் சென்ற சே. கண்ணன் (வயது 14) என்ற சிறுவன் படையினரின் சூட்டால் தலையில் படுகாயமடைந்ததாகவும் —

அனேகமாக அவர் உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் இச்சம்பவத்தில் காயமுற்ற சண்முகராசா தெரிவித்தார். (உ-15)

## தென்மராட்சியில் நேற்றும் பரவலாக ஹெலித் தாக்குதல்

தென்மராட்சிப் பகுதியில் நேற்றும் பரவலாக ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று மாலை 3.45 மணியளவில் சாவகச்சேரிடச்சுவீதியில் ஹெலிக்கொப்டரிலிருந்து ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டதில் இருவர் காயமுற்றனர்.

அங்கு ஆலையில் வேலை செய்து கொண்டிருந்த கதிர்காமு சுந்தரலிங்கம் வயது 30 (கணுக்கேணி), முத்துசாமி தர்மராசா (வயது 38) ஆகிய இருவருமே காயமுற்றனர். அங்கு ஆலையும் சேதமுற்றது.

பூநகரிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் மாலையில் கச்சாய் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இதே சமயம்—

நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு கச்சாய் அம்மன் கோவிலிலும், கச்சாய் கடலிலும் புக்காரா விமானம் எட்டுக் குண்டுகளை வீசியது.

குண்டு வீழ்ந்து வெடித்த இடங்களில் திப்பி முகில் போல புகை எழுந்தது. (உ-த-15-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வர்த்தகமும் கணக்கியலும் G. C. E O/L வகுப்புக்கான 1986 தொடக்கம் 1992 வரை 7 வருட கடந்தகால வினா-விடை உள்ளடக்கியது. ஆக்கம்: இ. செல்வநாயகம். கணக்கியல் ரூபா 45/- வர்த்தகம் ரூபா 60/- தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ/6141)

## யாருடையது?

யாழ். மகிளை பரிச்சார் வித்தியாலய வினை யாட்டு மைதானத்தில் மாணவி ஒருவரால் கண்டெடுக்கப்பட்ட தங்கச் சங்கிலி ஒன்று பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டி உரியவர் பெற்றுக் கொள்ளவும். திருமதி ச. காசிப்பிள்ளை அதிபர். (87587)

## இலவச திருமண சேவை

31 வயது. Non R/C. பூராடம். ஜேர்மனியில் உள்ள மணமகனுக்கு ஏற்ற மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞா. வி. ஞ காலைமிக். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27535)

## காவேரி சியாக்காய்ப்பவுடர்

பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதுடன் கூந்தல் வளர்ச்சி, கண் குளிர்மைக்கு மிகவும் திறமையானது. யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்: சிவசம்பு களஞ்சியம் மின்சார நிலைய வீதி, வெங்கடேசன் வைத்தியசாலைச் சந்தி. (87451)

# போர்க் கால தெருக் கூத்து

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். நகரப் பகுதியில் இரவு வேளையில் முக்கிய சந்திகளில் போர்க்கால தெருக்கூத்து நடத்தப்பட்டு வருகிறது.

திசை கலை பண்பாட்டுக் கழகத்தினரால் தற்போது நடத்தப்பட்டு வரும் இத் தெருக் கூத்தில், தென் இலங்கை அரசியல் வாதிகள் தமிழர் பிரச்சினையில் தற்போது கடைப்பிடிக்கும் போக்கு, போராட்டத்திற்கு மக்கள் எவ்வாறு தமது பங்களிப்புகளை செய்யலாம் என்பன பற்றி தத்ரூபமாக சித்தரித்துக் காட்டப்படுகிறது. (இ-162)

# பாராட்டு விழா

இணுவில் மத்திய கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் ஜே. பியின் சேவையைக் கௌரவிக்குமுகமாக நாளை புதன்கிழமை மாலை இணுவில் மத்திய கல்லூரியில் பாராட்டு விழா ஒன்று நடைபெற இருக்கின்றது.

இணுவில் பொதுமக்கள் சார்பாக எடுக்கவிருக்கும் பாராட்டு விழாவுக்கு இராமநாதன் நுண்கலைத் துறையின் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா தலைமை வகிப்பார். வடபிரதேசக் கல்வி அதிபதி திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்வைபவத்தில் பாராட்டு விழா மலர் வெளியிடப்பட இருக்கிறது. (க-152)

# பயிற்சியும் கருத்தரங்கும்

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சார்பில் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை சிறுவர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஐந்து நாள் பயிற்சியும், கருத்தரங்கும், மீட்டல் பயிற்சியும் நடைபெறவுள்ளன. (இ-80)

# பணம் நடுகை

வல்வெட்டித்துறை, ஒக். 5

வடமராட்சியில் உள்ள உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி ப. நோ. கூ. சங்கம் புலோலி ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் ஆகியவை கப்பூது அந்தணன் திடல் வெளியில் பனம் நடுகைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன. (இ-155)

---

வடபிராந்திய

# யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

அளிக்கும்

# நிதியுதவி கலை நிகழ்ச்சிகள்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி

காலம்: 16 – 10 – 1993

நேரம்: இரவு 6 மணி

நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினம் அவர்களினால் நடத்தப்படும் "வீரதீரச் செயல்கள்" முதல் முறையாக யாழ். நகரில் அரங்கேறவுள்ளன.
   - (அ) நெருப்பு புதைகுழியில் சில மணி நேரம் படுத்திருத்தல்
   - (ஆ) இரண்டு உழவு யந்திரங்களை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்
   - (இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
   - (ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்துப் பிடித்து நிறுத்துதல்
   - (உ) 35 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்
   - (ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின் மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்
   - (எ) இன்னும் பல வீரதீரச் செயல்கள்
2. திரு. மோகன் மாஸ்ரர் அவர்களினால் நடத்தப்படும் கராட்டி விளையாட்டுக்கள்.
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை, பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் நாடகம்.

— வ. யா. ஆ. ம. வ. சங்கம்.

(சி-6184)

---

# ஈராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 — 06 — 1941 | 28 — 09 — 1991 |

## அமரர் நடராஜா சண்முகநாதன்

திதி: 05 - 0 . 1993

குடும்பமெனும் கோயிலிலே தெய்வமாய் நீர் இருந்தீர்! தெய்வமே விடைபெற்றால் கோயிலின் நிலை என்ன? ஆன்றினை இழந்த பேடுபோல், மயிலிழந்த கனிமான் போல், ஒளி இழந்த கண்களைப்போல் உமைப்பிரிந்து யாம் வாடுவதை யார் அறிவார்? விண்ணிலே விடிவெள்ளியாய் இருக்கும் உம்மை அன்றி...!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்.

உறவினர்கள்.

227, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (87534)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 — 07 — 1930 | 05 — 10 — 1992 |

திருமதி

## நகுலாம்பிகை ஆனந்தரத்தினம்

தூக்கி அரவணைத்துத்
தோள் சுமந்து அமுதூட்டி!
தேக்கி வைத்த அன்பாலே
தேகத்தைக் குளிப் பசட்டி!
வைக்குவித்த தாய்மையெனும்
உயர்குடும்பத் தலைவிக்கு
ஆக்கிவைத்தோம் கவிதையெனும்
அன்பார்ந்த காணிக்கை!!

பிரிவால் துயருறும்:

கணவன், பிள்ளைகள்,

மாமி, சகோதரர்கள்,

சகோதரிகள், மைத்துனர்கள்.

(6517)

---

# 15,000 பால்மா பக்கெட் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 5

ஒப்பரேசன் யாழ்தேவி நடவடிக்கையால் இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர், குழந்தைகளுக்கு விநியோகிக்க சுமார் 15 ஆயிரம் பால்மா பக்கெட்டுக்களை வழங்குமாறு வெயர் இன்ரநாஷனல் நிறுவனத்திடம் யாழ். செயலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். செயலகத்தின் வைசியிருப்பில் பால்மா வகைகள் தற்சமயம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

குடாநாட்டின் வெளிச் சந்தைகளில் பால்மா வகைகளுக்கு செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (உ-5)

## WANTED

அனுபவம் உள்ள தகுதி வாய்ந்த தமிழ், ஆங்கில தட்டெழுத்து ஆசிரியை தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

North Ceylon Technical Institute,
14, St Peter's Lane,
JAFFNA.

(இ/6170)

# விஞ்ஞான உபகரணங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 5

கல்வி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நாளை புதன்கிழமை விஞ்ஞான உபகரணங்கள் விநியோகம் செய்யப்படவிருந்த பாடசாலைகளுக்கு அன்றைய தினம் விநியோகம் இடம்பெறாது என்றும் —

மறுநாள் வியாழக்கிழமையே உபகரணங்கள் விநியோகம் செய்யப்படும் என்றும் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த)

---

# யாழ். இந்து மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்

## உலக ஆசிரியர் தினம்

## ஒக்டோபர் — 6

நாளை ஒக்டோபர் 6ஆம் திகதி காலை 9-30 மணிக்கு உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு எமது கல்லூரி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வைபவத்தைக் கொண்டாடவுள்ளோம். இவ்வைபவத்தில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மாணவர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் / சபை.

(இ/6171)

---

உரும்பராய் இந்துக் கல்லூரி

# ஆசிரியர் தின விழா அழைப்பு

06 – 10 – 1993 காலை 9-00 மணி

கல்லூரியின் ஆசிரியர்களை கௌரவிக்கும் வைபவம் முன்னை நாள்

அதிபர் திரு. செ. சிவபாலன்

தலைமையில் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்

முன்னைநாள் பிராந்திய தபால் அத்தியட்சகர்

திரு. பொ. துரைசாமி அவர்கள்

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கல்லூரி மாணவர்கள் யாவரும் கலந்து கொள்ளும்படி அன்பாகக் கேட்கப்படுகின்றனர்.

செ. ஐயாத்துரை,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பில்.

ச. ஏகாம்பரநாதன்,
பாடசாலை பழைய மாணவர் சங்கம் சார்பில்.

(87541)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | மறைவு |
|---|---|
| 23 — 08 — 1922 | 05 — 09 — 1993 |

அமரர்

## அப்பாப்பிள்ளை சிவராமலிங்கம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர், கட்டடத் திணைக்களம் யாழ்.)

திதி: 05–10–1993

நீக்கமற நெஞ்சில் நிலைபெற்ற தெய்வமே!
வாழ்ந்தாய் எமக்காக, வாழவைத்தாய் தலை நிமிர்ந்து
ஏத்தி நின்றாய் கைதடியூர் முருகப் பெருமானை
மறுவலம் போற்றிடவே உயர்ந்து நின்றாய்
ஆறாத்துயரத்தில் சூட்டுகிறோம் கண்ணீர் மாலை!

என்றும் உங்கள் பிரிவால் வாடும்;
- குடும்பத்தினர்.

"ஞானவிதான்",
கைதடி வடக்கு.

(87539)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## புதிய தடை எதற்காக?

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் ஊரடங்கு அமுல் செய்யப்படுவதாக கடந்த செவ்வாய்க்கிழமை அரசு அறிவித்தது. பின்னர் ஊரடங்கு நீடிக்கப்படுவதாக இரண்டொரு நாட்கள் அறிவித்தது. அதன் பிறகு நேற்றிரவே ஊரடங்கு நீக்கப்பட்டதாக உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இராணுவத்தினர் தமது தாக்குதல் நடவடிக்கைகளை அதன் பின்னரும் தொடர்கிறார்கள். "ஒப்பரேஷன் யாழ்தேவி'' இராணுவத் தாக்குதலை நடத்துவதற்காகவே ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

அரசின் ஊரடங்கு அறிவிப்பை தமிழ் மக்கள் கடந்த மூன்றேகால் வருடங்களாக கவனத்தில் எடுப்பதில்லை என்பது தெரிந்ததே. அதற்குக் காரணங்கள் இரண்டு. அரசின் ஆணை இப்பிரதேசத்தில் செல்லுபடியாகாமற் போயிற்று. அதற்கான ஆட்சி வலுவை அது இழந்துவிட்டது என்பது ஒன்று.

ஊரடங்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கூறி மக்களை ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடையுமாறு கேட்கும் படையினர் ஆலயங்கள் மீதும், பாடசாலைகள் மீதும் குண்டு, ஷெல்மாரிகளைப் பொழிந்து ஹெலியிலிருந்து வேட்டுக்களைத் தீர்த்தும் மக்களைக் கொல்வது இரண்டாவது காரணம்.

'ஒப்பரேஷன் யாழ்தேவி'யை ஒட்டியும் அத்தகைய தாக்குதல்கள் ஆலயங்களிலும் சந்தைப் பகுதிகளிலும் நடத்தப்பட்டிருக்கின்றன. ராணுவ நடவடிக்கை நடைபெறும் இடத்திலும் அதனை அண்டிய இடங்களிலும் மட்டுமன்றி பரவலாக தூர இடங்களிலும் குண்டு, ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இமைக்கச்சி இராணுவ நடவடிக்கையை ஒட்டி 35 மைல் தொலைவில் உள்ள கொச்சுவிலில் ஆலயம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இரவு வேளைகளில் கூட குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்த வெறித்தனமான தாக்குதல்களால் காயமுறுவோரை, உயிருக்காக ஊசலாடுபவர்களை ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்வதற்கும் அரசு தடைவிதித்திருக்கிறது! இடம்பெயரும் மக்களுக்கு உதவுவதற்கும் தடைவிதித்திருக்கிறது!

ஆம். ஊரடங்கு அமுலில் இருப்பதாக அறிவிக்கப்பட்ட வேளைகளில் வடக்கில் அரசாங்க வாகனங்கள், தொண்டர் நிறுவன வாகனங்கள் நடமாடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு தடை விதித்திருக்கிறது! அந்தத் தடையை மீறி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் வாகனங்கள் நடமாடினால் அவை தாக்குதலுக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் அர்த்தம் என்ன? இராணுவத் தீர்வு என்பது புலிகளை ஒடுக்குவதாகக் கூறித் தமிழர்களை அழிப்பதே. இராணுவ நடவடிக்கையின்போது தமிழ்ப் பொதுமக்கள் இயன்றளவு பெருமெண்ணிக்கையில் கொல்லப்பட வேண்டும். காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்து அவர்களைக் காப்பாற்றக்கூடாது. ஆபத்தான இடங்களில் இருந்து தமிழ் மக்கள் இடம்பெயர வாகன வசதி செய்யாமல் அவர்கள் அங்கேயே இருந்து குண்டு, ஷெல் தாக்குதல்களுக்கு ஆளாகி மாண்டு போக விட்டுவிட வேண்டும். இடம்பெயர்ந்தவர்களுக்கும் அவசர உணவு வசதி எதுவும் செய்யாமல், அவர்களையும் பட்டினி போட்டுச் சாகடிக்க வேண்டும்.

அத்தியாவசிய சேவைக்குரிய அரச வாகனங்கள், தொண்டர் நிறுவன வாகனங்கள் சேவையில் ஈடுபட்டால் மேலே கூறும் இலக்குகளை எய்த முடியாது என்று அரசு கருதுகிறது. அதனாலேயே வாகன நடமாட்டத்துக்குத் தடை'

இத்தகைய அரசுக்கு, தமிழர்கள் தமது பிரஜைகள் என்று கூறுவதற்கு என்ன யோக்கியதை உண்டு?

## பாடசாலை - கோட்ட மட்டத்தில் நாளை ஆசிரியர் தின விழா

அச்சுவேலி, ஒக். 5

ஆசிரியர் தினவிழா பாடசாலை மட்டத்திலும் கோட்டமட்டத்திலும் நாளை புதன்கிழமை நடைபெறும்.

பாடசாலை மட்ட விழா அந்தந்தப் பாடசாலையில் காலையில் நடைபெறும். அந்த விழாவில் பாடசாலையில் சேவையாற்றும் சகல ஆசிரியர்களும் அதிபர்களும் பாராட்டிக் கௌரவிக்கப் படுவர்.

பாடசாலை மட்டத்திலான விழாவை பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை பழைய மாணவர் சங்கம், மாணவர் சங்கம் என்பன சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளன.

பிற்பகல் கோட்ட மட்டத்தில் விழா நடைபெறும். பாடசாலை அபிவிருத்திச் சபைகள் கோட்டக் கல்வி அலுவலக நிர்வாகம் என்பன இதனை ஏற்பாடு செய்துள்ளன.

கடந்த காலங்களில் ஆசிரியர்களின் ஏற்பாட்டில் ஆசிரியர் தினவிழா கொண்டாடப்பட்டது.

இந்தநிலை இந்தவருடம் முற்றாக மாற்றப்பட்டு பெற்றோர்—கல்வி நிர்வாகிகள்— மாணவர்கள் இதனைப் பொறுப்பேற்று நடத்துகின்றனர். (இ-11)

## இன்று

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. க. மகாதேவராசா தலைமையில் விவசாயப் பயிற்சி வகுப்பும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்கில் மானிப்பாய் கோவிற்பற்றுப் பகுதியில் முதலாவதாக விவசாய ஓய்வூதியம் பெறும் திரு. சி. முதலியார் கௌரவிக்கப்பட உள்ளார். (க-90)

o o o

சோதி வேம்படி வித்தியாசாலையின் வருடாந்த பரிசுத்தின விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் திருமதி மகேஸ்வரி சாந்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க உள்ளார். (க-90)

o o o

யாழ்ப்பாணம் —வண்ணார் பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பிரதம அருச்சகராக கடமையாற்றிய பிரம்மஸ்ரீ ம. செந்திநாத குருக்களுக்கு மேற்படி ஆலய தர்மபரிபாலன சபையினர் சேவை நலம் பாராட்டு விழா நடத்த உள்ளனர்.

இன்று 5ஆம் திகதி மாலை ஆறு மணியளவில் அவருக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை தலைவர் கலாநிதி ப. கோபால கிருஷ்ணன் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி விருது வழங்கி கௌரவிப்பார்.

கலாநிதி சிவஸ்ரீ கந்தசாமி இலக்குருக்கள், சிவஸ்ரீ வை. சோமதேவக் குருக்கள், கலாநிதி க. கணகராசா, பௌராணிகர் மு. தியாகராசா ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். (க-152)

## யாழ். செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 5

களைநாசனி, கிருமிநாசனி போன்றவற்றுக்கு விலை நிர்ணயம் செய்தல் தொடர்பாகவும், விநியோகிப்பது தொடர்பாகவும் கலந்தாலோசிப்பதற்கான கூட்டம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை, காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக் கூட்டத்திற்கு சகல கிருமிநாசனி விற்பனை முகவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (அ)

## பல்கலைக்கழக ஊழியர் தினம்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். பல்கலைக்கழக ஊழியர் தினவிழா நாளை புதன்கிழமை நடைபெறுகிறது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் திரு. ச. க. தவேந்திரன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவும்—

சிறப்பு விருந்தினராக பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. க. பரமேஸ்வரனும் கலந்து கொள்வார்கள்.

காலை 8.00 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகி விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படும்.

பிற்பகல் 1.00 மணிக்கு கலைச்சபை ... சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் ... (இ)

## கோட்ட மட்டத்திலான ஆசிரியர் தின விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 5

உலக ஆசிரியர் தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆறு கல்விக் கோட்டங்களிலும் நாளை பிற்பகல் 2.30 மணி முதல் கொண்டாடப்பட உள்ளது.

யாழ் கல்விக் கோட்ட ஆசிரியர் தின விழா யாழ் இந்துக் கல்லூரியில், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தலைமையிலும் —

வேலணைக் கல்விக் கோட்ட ஆசிரியர் தின விழா, காரைநகர் ... பாடசாலை இயங்கும் யாழ். சென். ஜோன் அக்கடமியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் தலைமையிலும் —

மருதனார்மடம் கல்விக் கோட்ட ஆசிரியர் தினவிழா இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையிலும் —

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட ஆசிரியர் தினவிழா மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைலிங்கம் தலைமையிலும் —

தென் மராட்சிக் கல்விக் கோட்ட ஆசிரியர் தின விழா சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வீரபத்திரர் தலைமையிலும் நடைபெற உள்ளன.

இவ்விழாக்களில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பிரதிநிதிகளும், கோட்ட மாணவர் அமைப்புப் பிரதிநிதிகளும், அரசியல் துறைப் பொறுப்பாளர்கள், பிரதிநிதிகளும், மாணவர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு உரையாற்றுவர். "விளக்கு'' சஞ்சிகை அறிமுகமும் விழாக்களில் இடம் பெறும். (அ)

## விளக்கு வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 5

உலக ஆசிரியர் தினத்தை ஒட்டி நாளை புதன்கிழமை காலை பத்து மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் "விளக்கு'' சஞ்சிகை வெளியீட்டுவிழா நடைபெறவுள்ளது (க-152)

## பாதுகாப்பை ஏற்க கருணாநிதி முடிவு

தமிழக அரசு வழங்கும் பாதுகாப்பை ஏற்க தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி முடிவு செய்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளால் கருணாநிதியின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற தகவலை அடுத்து அந்த முடிவை அவர் மேற்கொண்டிருப்பதாக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆற்காடு வீராசாமி நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

இம்முடிவு தி.மு.க.வின் ஏனைய தலைவர்களுடன் கலந்து ஆலோசித்த பின்னரே எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (உ-எ-க-162)

## யாழ் - வன்னி தகவல் சேவை தொடர்ந்து இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ் - வன்னி இடையேயான போக்குவரத்துச் சீர்கேடு காரணமாக ஏற்பட்டிருக்கும் தகவல் பரிமாற்றத் தடங்கலை கருத்திற் கொண்டு—

யாழ் நகருக்கும் கிளிநொச்சிக்கும் இடையேயான தொடர்புச் சேவை நடைபெற்று வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது

இச்சேவைக்கான அலுவலகங்கள் யாழ்ப்பாணத்தில் அருச்சனா வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும்—

கிளிநொச்சியில் பழைய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அண்மையிலும்— இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தகவல்கள் சாதாரண விநியோகம் விரைவு விநியோகம் என இரண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணி நேர இடைவெளிக்குள் அவ்வப்பகுதி தபால் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் கையளிக்கப்படுவது சாதாரண விநியோகம் ஆகும்.

தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணி நேர இடைவெளியில் நேரடியாக விநியோகிக்கப்படுவது விரைவு விநியோகமென வகுக்கப்பட்டுள்ளது. இந்த விரைவு விநியோகத்திற்கு சாதாரண கட்டணத்துடன் 500 ரூபா மேலதிகமாக செலுத்த வேண்டும். (உ)

தகவல்களை கையேற்கும் கருமபீடம் ஒமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இக்கரும பீடங்கள் தினசரி காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரையும் பின்னர் பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 5 மணி வரை ...

## கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்

கிளாலிவரை இராணுவத்தினர் முன்னேறியதற்குப் பழிக்குப்பழி வாங்க விடுதலைப் புலிகள் கொழும்பில் புதிய தாக்குதல்களில் ஈடுபடக்கூடும் என அரசாங்கம் அஞ்சுவதாகவும் —

இதனால் கொழும்பில் மேலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்படுகிறது.

தலைநகரில் சோதனைச் ... கப்பட்டு, வாகனங்கள் தீவிர ... பட்டு வருகின்றன.

## 9 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

"ஒப்பரேஷன் யாழ்தேவி'' இராணுவ நடவடிக்கையால் பளை, சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த 9 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் இடம் மாறி இடம் அலைந்து திரிவதால் அவர்களின் எண்ணிக்கை தொடர்பாக சரியான விவரங்களைத் திரட்ட முடியாதிருப்பதாகக் கூறப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களில் பலரும் வரணி, மருதங்கேணி, கைதடி, நாவற்குழி பகுதிகளில் தங்கியுள்ளனர்.

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் எதிர்பாராத விதமாக இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றில் வீரவேங்கை சந்திரதாஸ் (நாகர் சந்திரன் — சித்தாண்டி, மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (த)

## நாளை

யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ தி. நடராசபாபதி சர்மா அவர்கள் எழுதிய "ஆபஸ்தம்ப தஹந ஸம்ஸ்காரம்'' என்னும் நூல் வெளியீடு நாளை புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

o o o

கொழும்புத்துறை மணிப்புரி ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள கொலரா தடுப்பு சம்பந்தமான கருத்தரங்கு நாளை புதன் மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

o o o

கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வலிகாமம் மேற்கு பண்ணாகம் கிராமத்தின் உற்பத்திக் குழுவினரின் அனுசரணையுடன் நாளை புதன் 15 பேருக்கு நல்லின ஆடுகள் வழங்கப்படும். பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் முன்றலில் இவ்வைபவம் இடம்பெறும். (த-28)

## படை நடவடிக்கை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி ஏஜென்ஸிகள் சுட்டிக்காட்டின.

பல லெப்டினன்ட்கள் மற்றும் அதிகாரிகளையும், டாங்கிகளையும், இராணுவத் தளபாடங்களையும் இழந்து படையினர் கைப்பற்றிய இடங்களை ஏன் கைவிட வேண்டி வந்தது என்பது தொடர்பாக தென்னிலங்கை மக்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பி.பி.ஸி குறிப்பிட்டது.

"பிடிக்கப்பட்ட பகுதிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இராணுவத்துக்கு ஆயிரக்கணக்கில் துருப்புகள் தேவை. இங்குதான் இராணுவத்தின் பலவீனம் காணப்படுகிறது.

"இப்போரை நடத்துவதற்கு தேவையான போதியளவு ஆள்பலமோ துருப்புகளை பெரும் எண்ணிக்கையில் கொண்டு செல்லக்கூடிய நவீன இயந்திர சாதனங்களோ இராணுவத்தில் இல்லை.

1987 முதல் 1990 வரை இருந்த இந்திய இராணுவத்தால் ஆள், படைபலம் பெருமளவு இருந்தும் விடுதலைப் புலிகளை பணிய வைப்பது என்பது இயலாமற் போய்விட்டது.

"இந்திய ராணுவத்துக்கு இருந்தது போல் அரசியல் கட்டுப்பாடுகள் தமக்கு இல்லை என்று இலங்கை இராணுவம் கூறுகின்றது.

"ஜனாதிபதி விஜேதுங்கா, இராணுவம் என்ன செய்ய முடியும் என்பதை காட்டும்படி இராணுவத்துக்கு பூரண சுதந்திரம் கொடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது

ஆனாலும் விஜேதுங்கா பலவீனமான தலைவர் என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது.

"தேர்தல் ஆண்டு நெருங்கி வரும் சமயத்தில் இராணுவத்தின் பலம் தெரியப்படுத்தப்பட்டால் அது அரசத்தலைவரின் நலனுக்கு நல்லது, சாதகமாக இருக்கும் என்று அரசத் தலைவரின் ஆலோசகர்கள் முடிவு செய்திருப்பது போல் தெரிகிறது.

"கடந்த 10 ஆண்டுகளில் 17 ஆயிரத்துக்கு அதிகமான படையினர் இராணுவத்தை விட்டு ஓடிவிட்டனர் அண்மையில் சேர்க்கப்பட்ட படையினருக்கும் சரியான பயிற்சி இல்லை.

"என்னவாக இருப்பினும் இப்போதைக்கு அரசு அரசியல் தீர்விலும் பார்க்க இராணுவத்தீர்வை அடைய உறுதி பூண்டிருப்பது போல தெரிகின்றது ஆனால் அரசபடையினர் விடுதலைப்புலிகளை உடனடியாக வெல்ல முடியுமா என்பதும் சந்தேகம் தான்'' - இவ்வாறு பி.பி.ஸி மேலும் குறிப்பிட்டது. (உ-எ-6)

**குளமின்றிப் போனால் — நாடு வளமின்றிப் போகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

